
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1015

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

146




# அரண் இல்லம்!

## சமூக நீதி அரசின் சமத்துவப் பார்வை!

'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

திருநங்கைகள் நலன் காத்திடும் தொடர் நடவடிக்கைகளின் வரிசையில், திருநங்கைகள் எதிர்நோக்கும் சமூக, மனநலம் மற்றும் பாதுகாப்பு சார்ந்த சவால்களைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குப் பாதுகாப்பான, மதிப்பும் மரியாதையும் நிறைந்த ஆதரவான வாழ்விடச்சூழலை உருவாக்கும் முயற்சியில் தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ள திட்டம் 'அரண் இல்லம்'.

2025-ஆம் ஆண்டு, நிதிநிலை அறிக்கைக் கூட்டத்தொடரில், 'சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை' மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது,

"திருநங்கைகளுக்கான 'அரண்' எனும் பெயரில், இரண்டு தங்கும் இல்லங்கள், சென்னை மற்றும் மதுரையில் அமைக்கப்படும்" என அறிவித்தார், துறையின் அமைச்சர் கீதா ஜீவன்.

வீடற்ற திருநங்கைகளுக்கு இந்த இல்லம் வாழ்விடமாக இருக்கும் என்பதால், அரசின் இந்த அறிவிப்பு, பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது.

உடனடியாக, வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டு, தகுதி பெற்ற அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் உதவியுடன், தொடங்கப்பட்ட அரண் இல்லங்களை 13.10.2025 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார் முதலமைச்சர், மு.க. ஸ்டாலின் அவர்கள்.

சென்னை செனாய் நகர் மற்றும் மதுரை அண்ணா நகர் ஆகிய இடங்களில் முதற்கட்டமாக இரு இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### திட்டத்தின் நோக்கமும் பணிகளும்

பாலினம் அடையாளம் காணும் பருவத்தில், பயம் மற்றும் மன அழுத்தம் காரணமாக குடும்பம் மற்றும் கல்வியிலிருந்து விலகி நகரங்களுக்கு வரும் திருநங்கை, திருநம்பி, இடைபாலினரை உடனடியாக பாதுகாக்கவும், அவர்களுக்கு சட்ட ஆலோசனைகளை வழங்கவும் , குடும்பத்துடன் இணைப்பதற்கான முயற்சிகளையும் இந்த அரண் இல்லம் மேற்கொள்ளும்.

ஒவ்வொரு இல்லத்திலும் 25 பேர் வரை தங்கலாம். 18 வயதுக்கும் மேற்பட்டவர்கள், தமிழ்நாடு திருநங்கை நல வாரியம் வழங்கும் அடையாள அட்டை பெற்றிருந்தால், ஒரு மாதம் முதல் அதிகபட்சம் மூன்று ஆண்டுகள் வரை இங்கு தங்க அனுமதி அளிக்கப்படும்.

18 வயதுக்கும் மேற்பட்டவர்கள், தமிழ்நாடு திருநங்கை நல வாரியம் வழங்கும் அடையாள அட்டை பெற்றிருந்தால், ஒரு மாதம் முதல் அதிகபட்சம் மூன்று ஆண்டுகள் வரை இங்கு தங்க அனுமதி அளிக்கப்படும்.

இலவச உணவு, உடை, மனநலம் மற்றும் தொழில் வழிகாட்டல் கலந்த ஆலோசனை, கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளைத் தொடர வழிகாட்டலும் இந்த இல்லம் மூலம் செய்து தரப்படும்.

இலவச உணவு, உடை, மனநலம் மற்றும் தொழில் வழிகாட்டல் கலந்த ஆலோசனை, கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளைத் தொடர, வழிகாட்டல் அளிக்கப்படும்.

திருநங்கைகளுக்கு எதிரான வன்முறைகள், பாகுபாடுகள் தொடர்பான புகார் அளிக்க உதவுதல், இலவச சட்ட உதவி மற்றும் உரிமைகள் குறித்த விழிப்பு உணர்வு வழங்குதல், அவர்களின் குடும்பத்தினருக்கு விழிப்பு உணர்வு ஏற்படுத்துதல் ஆகிய பணிகளை ஒருங்கிணைந்த முறையில் இந்த இல்லம் மேற்கொள்ளும்.



இந்தியாவிலேயே முதல்முறையாக தமிழ்நாடு அரசுதான் இந்த வசதியை உருவாக்கிக் கொடுத்துள்ளது. வீடற்ற திருநங்கைகள், திருநம்பிகள், இணைபாலினருக்கு, கல்வி, வேலைவாய்ப்புக்கு உறுதுணையாக இருந்து, தங்களது சொந்த காலில் நிற்கும் வரையில் இந்த இல்லம் பேருதவியாக இருக்கும்.

**-காவ்யா, தோழி அமைப்பு.**

தொழில் மேம்பாட்டுப் பயிற்சிகள் நடத்த இட வசதி, ஒவ்வொரு வாரமும் மனநல ஆலோசகர் இல்லத்துக்கு வருகை தர வேண்டும் என விரிவான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### தகுதியான நிறுவனங்கள் வழி

இந்திய சட்டங்கள்படி பதிவு செய்யப்பட்ட, தகுதி வாய்ந்த 'அரசு சாரா தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வழியாக, மாவட்ட நிர்வாகம் உதவியுடன் இந்த இல்லங்கள் செயல்படும்.

திருநங்கையர் நலனுக்காக ஐந்து ஆண்டுகளுக்கு மேல் செயல்பட்டு வரும் நிறுவனங்கள், குறிப்பாக, அதன் நிர்வாகக் குழுவில், திருநங்கையர் அடங்கி இருக்க வேண்டும் அல்லது அவர்களே தலைமையேற்க வேண்டும் என்கிற விதிமுறைகளைப் பூர்த்தி செய்த நிறுவனங்கள் வழி இந்த இல்லங்கள் தற்போது செயல்படுத்தப்படுகின்றன.

திருநங்கையர் சமுதாயத்துக்கு ஆரோக்கியமான வாழ்வாதார சூழலை உருவாக்கும் இந்த அரண் இல்லம், புதிய முன்மாதிரியாக - வழிகாட்டியாக எதிர்காலத்தில் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தக்கூடிய தொடக்கமாகவும் அமைந்துள்ளது.

'எல்லோருக்கும் எல்லாம்' எனச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அரசு வீடற்ற திருநங்கைகளுக்கு வழங்கிய கருணை பரிசு, 'அரண் இல்லம்' என்றால் மிகை இல்லை.

"'எல்லோருக்கும் எல்லாம்' எனச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அரசு வீடற்ற திருநங்கைகளுக்கு வழங்கிய கருணை பரிசு, 'அரண் இல்லம்' என்றால் மிகை இல்லை."

**...சாதனை தொடரும்**

## இதழியல் துறையில் பயிற்சி!

தமிழ்நாடு அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையானது, பட்டியல் மற்றும் பழங்குடியினர் சமூக பட்டதாரி இளைஞர்களின் கல்வி, வேலைவாய்ப்பு, தொழில்முறை திறன் மற்றும் சமூகத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில் தற்போது, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின நலத்துறையின் சார்பில், சென்னை இதழியல் கல்வி நிறுவனம், சமூகநீதி மற்றும் சமத்துவ மையம், சென்னை சமூகப்பணி கல்லூரியுடன் இணைந்து இதழியல் மற்றும் ஊடகவியல் துறை சேர்ந்து 'ஒரு வார உண்டு உறைவிடப் பயிற்சிப் பட்டறை'யை நடத்துகிறது.

கோட்டூர்புரத்தில் உள்ள சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தில் நவம்பர் 10 முதல் 18 வரையில் 9 நாட்கள் இந்தப் பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

பயிற்சியை நிறைவு செய்யும் 26 பங்கேற்பாளர்களில் 15 பேருக்கு முன்னணி ஊடக நிறுவனங்களில் இரண்டு மாதங்கள் ரூ.20,000 ஊக்கத் தொகையுடன் கூடிய பயிற்சி வழங்கப்பட உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகத்துறையில் விளிம்புநிலை மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் முயற்சி இது என சமூக வலைதளங்களில் பலரும் பாராட்டியுள்ளனர்.

## ப்ளாஷ்பேக்



### தொ.மு.ச. பேரவை நியமனமும் வாழ்த்தும்...



கே.ஆர்.முருகேசன்

2010-ஆம் ஆண்டு தொ.மு.ச. பேரவைத் தலைவராகச் செயல்பட்டு வந்த அண்ணன் செ.குப்புசாமி அவர்கள் ஆலோசனையின் பெயரில், என்னை கேரள மாநில தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளராக நியமித்தார் தலைவர் கலைஞர். இதையடுத்து அவருடன் சென்று தலைவரைச் சந்தித்து வாழ்த்து பெற்றபோது எடுத்த படம். அதன் பிறகு தொடர்ந்து, தலைவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு நிறையவே கிடைத்தன. கழகத்தின் தொ.மு.ச பேரவைச் செயல்பாடுகளில் தமிழ்நாடு கேரளா இரண்டு மாநிலங்களுக்கும் இணைப்புப் பாலமாக இருந்து வருவதில், மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறேன்.

**– கே.ஆர்.முருகேசன், பொதுச் செயலாளர், கேரள மாநில தொ.மு.ச. பேரவை, திருவனந்தபுரம், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நினைவுகள்... (நம் வரலாறு)

நம்வரலாறு

### யானை குதிரை அணிவகுப்புடன் மாவட்ட மாநாடு!

1958-ஆம் ஆண்டு மே 10 மற்றும் 11-ஆம் தேதிகளில் தஞ்சை மாவட்டக் கழக 3-வது மாநாடு நடைபெற்றது. தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த 300 க்கும் மேற்பட்ட கிளைக் கழகங்களும், மற்ற மாவட்டக் கிளைக் கழகங்களும் மாவட்டம் வாரியாக கொள்கை முழக்கம் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கிக்கொண்டு அணிவகுத்துச் சென்றன. யானை, குதிரைகளின் அணிவகுப்பும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட மிதிவண்டிகளுடன் ஊர்வலமும் நடைபெற்றது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131